கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் மற்றும் மோட்டார் வாகன தீர்ப்பாயம்,
பெரியகுளம்
வழக்கு எண் MCOP No. 42/2022

நாள்: 01.06.2026

3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

(எ.ம.சா. 1 சோழராஜ் முன்னிலையானார். மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 3 ஆம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை)

விபத்து சம்பந்தமாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையில் இனம் தெரியாத வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக இந்நீதிமன்றத்தில் SC.10/2026 என்ற வழக்கில் ஆஜராகி எதிர்வாதம் செய்து வருகிறேன் என்று சொன்னால் சரிதான். TN 60 T 4605 என்ற வாகனம் விபத்தை ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்தில் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இனம் தெரியாத வாகனம் மோதி தான் விபத்து ஏற்பட்டது என்றும் அதனால் 3 ஆம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(Sd/- C. Sankar)
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.